# யாரிடமிருந்து உதவி பெறுவது என்பதைத் தீர்மானிப்பது இலங்கை அரசைப் பொறுத்த விடயம் - அமைச்சர் ஹேரத்

இலங்கைக்கு பிறநாடுகள் வழங்கும் உதவிகள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் வீ. என். சுக்ளா தெரிவித்த கருத்துக்களுக்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் இலங்கையில் சில வெளிநாட்டு சக்திகளின் தலையீடும், நடமாட்டமும் அதிகரித்துவருவது குறித்து கவலை தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர் இதனால் தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியின்மை ஏற்படக் கூடும் என எச்சரித்தார்.

இதற்குப்பதிலளித்த வெளியுறவு அமைச்சர் ஹேரத் இலங்கை இறைமையுடைய நாடு; அரசு சுதந்திரமாக எது வேண்டுமானாலும் செய்யலாம். யார் யாரிடம் இருந்து உதவி பெறுவது என்பது குறித்து நாமே முடிவு செய்வோம். இதில் பிறர் கருத்துக்கு இடமில்லை. எனினும் எமது அயல் நாடுகளின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் வெளியாரைத்தலையிட அனுமதியோம் என்ற உறுதியை எமது அரசு வழங்குகிறது என்றார்.

சீனப் பிரதமருடைய இலங்கை விஜயத்தின் எதிரொலியாகவே இக்கருத்து வேறுபாடு புலப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.


பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 31 பிரமோதூத மார்கழி 13 (28-12-1990) வெள்ளி


2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள்

## கிளிநொச்சி கனிஷ்ட ம. வி. மாணவர் கிழக்குப்பகுதி அகதிகளுக்கு அன்பளிப்பு

கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய சென் ஜோன் அம்புலன்ஸ் பிரிவு மாணவர்கள் இரண்டு லடசம் ரூபா பெறுமதியான நிவாரணப்பொருட்களை தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் கிழக்கு மாகாண அகதிகளுக்கு வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதி எங்கும் பொதுமக்களிடமிருந்து இவை சேகரிக்கப்பட்டிருந்தன.

அரிசி, பயறு, உழுந்து, மா மற்றும் 75 ஆயிரம் உடுபிடவைகள் மற்றும் பீங்கான் கோப்பைகள் என்பனவே இவ்வாறு சேகரிக்கப்பட்டன.

கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய மண்டபத்தில் இப்பொருட்களை கையளிக்கும் வைபவம் நடைபெற்றது. (ப-6)

வான் தாக்குதல் மத்தியில்

# ஆனையிறவிலிருந்து வெளியேறிய படையினர் மீது புலிகள் தாக்குதல்

## எட்டு சிப்பாய்கள் பலி

முற்றுகைக்குள்ளாகியிருக்கும் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து படையினர் பரந்தன் நோக்கி வெளியேற எடுத்த முயற்சி விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 7 மணியளவில் மூன்று குண்டுவீச்சு விமானங்களும் ஒரு வை- 12 ராட்சத விமானமும் முகாமைச் சுற்றிய பகுதியில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்க, இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியேறினர்.

முன்னேற முயன்ற படையினரை எதிர்கொண்டு விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர்.

நான்கு மணிநேரம் நீடித்த இம்மோதலையடுத்து நண்பகல் 12. 30 மணியளவில் இராணுவத்தினர் முகாமிற்கு பின்வாங்கினர். இச்சம்பவத்தில் இராணுவத்தரப்பில் 8 சிப்பாய்கள் கொல்லப்பட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறை ராணுவம் குடியிருப்பு நோக்கி ஷெல் தாக்கு

ஊர்காவற்றுறை பகுதியில் நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தினமும் ஷெல் தாக்குதல்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஏவப்பட்டுவருகின்றன. தனை போன்ற பகுதிகளில் விழுந்து வெடிக்கிறது.

இந்த நிலையினால் இருக்க முடியாத நிலையில் அப்பகுதி மக்கள் புங்குடுதீவு, யாழ்ப்பாணம், அராலி போன்ற

## வேலணையில் குண்டு வீச்சு ஐயனார் ஆலயப் பலத்தசேதம்!

நேற்று நண்பகல் 12 மணியளவில் வேலணைப் பகுதியில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தின.

வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் நடாத்தப்பட்ட குண்டு வீச்சினால் பள்ளி வாசலுக்கு அருகாமையில் இருந்த மு கனகசிங்கம் என்பவரது வீடு பலத்த சேதமடைந்தது. பல குண்டுகள் கடற்கரையிலும் வீழ்ந்து வெடித்தன.

செட்டிப்புலம் பகுதியில் நடத்தப்பட்ட குண்டு வீச்சினால் செட்டிப்புல ஐயனார் ஆலய முகப்புக் கொட்டகை பலத்த சேதமடைந்தது.

அராலித் துறைப் பகுதியில் இரு குண்டுகள் வீசப்பட்டன இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்ட வேளை பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்ததால் உயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (19-24)

## அம்பாறையில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது சூடு; 6பேர் பலி

## அமைச்சர் ரஞ்சன் வடக்கு கிழக்கு இன்னமும் படையினரது கட்டுப்பாட்டிலில்லை

வடக்கு கிழக்கில் இன்னமும் ஸ்ரீலங்காப்படையினர் ... தியாளர் மாநாட்டில் பேசிய

தல்கள் குடியிருப்பு பகுதி களை நோக்கி ஏவப்பட்டுவரு கின்றன.

மேற்படி ஏவப்படும் ஷெல் கள் புளியங்கூடல், நாரந் மக்கள் புங்குடுதீவு, யாழ்ப் பாணம், அராலி போன்ற பகுதிகளில் உள்ள உறவினர் களின் வீடுகளில் தஞ்ச மடைந்துள்ளார்கள். (20-19)

## கடமைக்குத் திரும்பாத ஆசிரியர்மீது நடவடிக்கை

தொடர்ச்சியாக மூன்று பாதகாலம் பாடசாலைக்கு கடமைக்குத் திரும்பாத ஆசிரி யர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த யூன் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்பு இராணுவ நடவடிக்கையைத்தொடர்ந்து பல ஆசிரியர்கள் இன்னும் கடமைக்குத் திரும்பாமை பற்றித் தெரியவந்ததைத் தொடர்ந்தே மேற்படி நட வடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது.

இதே நேரம் வெளி மாவட் டத்தைச் சேர்ந்த பல ஆசிரி யர்கள் அம்மாவட்டங்களில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### இராணுவநடவடிக்கையால் வெளியேறியோர்

## ஆறு மாதங்களின் பின்னர் மாங்குளத்தில் குடியேறுகின்றனர்

மாங்குளம் பகுதி மக்கள் ஆறு மாதங்களின் பின் தத் தமது வீடுகளில் குடியேறி வருகின்றனர்.

மாங்குளத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த அப்பகுதி மக்கள் கொலனிப் பகுதி வீடுகளில் மீண்டும் குடியேறி வருகின்றனர்.

இவர்களது வீடுகளை யானைக் கூட்டங்கள் சேத மாக்கியதோடு, பயன் தரும் தென்னை, வாழை மற்றும் மரங்களையும் முற்றாக நாசப் படுத்தியுள்ளது திருடர்களா லும் பல பொருட்கள் கொள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்கள் மீது சூடு; 6பேர் பலி

நேற்றுமுன்தினம் அம் பாறை மாவட்டம் பக்கியல்ல ராணுவ முகாமிலிருந்து வந்த ராணுவத்தினர் தாளையடி வெட்டைப்பகுதியில்நடத்திய பரவலான துப்பாக்கிச் சூட் டில் இரு பொது மககள் கொல்லப்பட்டனர்.

இதேபோன்று சவளக்கடை முகாம் ராணுவத்தினர் வீதி யால் சென்ற பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப் பாக்கிப் பிரயோகம் செய்த தில் நான்கு பொதுமக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட் டனர். இதில் வெல்லாவெளி யைச் சேர்ந்த மகாலிங்கம், விஸ்வலிங்கம் ஆகிய இருவர் அடையாளம் காணப்பட்டுள் ளனர். (71)

### மட்டு. மகிழடித்தீவில்

## வயோதிபரை சித்திரவதை செய்து ரெலோவினர் சுட்டுக்கொன்றனர்

மட்டக்களப்பு மாவட்டம் மகிழடித்தீவில் கைது செய்த வயோதிபர் ஒருவரை படை யினரும் ரெலோ குழுவினரும் இணைந்து சித்திரவதை செய்த பின்னர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த வாரம் நடந்த இச் சம்பவத்தில் பொன்னம்பலம் (60) என்ற வயோதிபரே பலியானவராவார் வயோதி

—04 ஆம் பக்கம் பார்க்க

## வல்லையில் லொறி மீது ஹெலிக்கப்டர் சுட்டது

அச்சுவேலி, வயாவிளான் பகுதியில் நேற்றுக்காலை ஹெலிக்கப்டர் வட்டமிட்டு சரமாரியாக துப்பாக்கிப் பிர யோகம் செய்தது.

வல்லைவெளியில் உணவு ஏற்றி வந்துகொண்டிருந்த அச்சுவேலி ப. நோ. கூ. சங்க லொறி மீதும் தாக்குதல்

—04 ஆம் பக்கம் பார்க்க

வடக்கு கிழக்கில் இன்னமும் ஸ்ரீலங்காப்படையினர் முழு மையாக எந்தவோர் பகுதி யையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை எனப் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன ஒப்புக் கொண்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற செய தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் ரஞ்சன், வடக்கில் பரந்தளவுப் பிரதேசம் இன் னமும் புலிகளின் கட்டுப்பாட் டிலேயே இருப்பதாகவும், கிழக்கில் படையினரால் கட் டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரபபட்ட பகுதிகளும் முழு

—04 ஆம் பக்கம் பார்க்க

### கடற்படை விதித்த கட்டுப்பாடு

## தீவுப்பகுதிகளுக்கு பத்திரிகை எடுத்துச் செல்லத்தடை!

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கு (செய் தித்தாள்)பத்திரிகைகொண்டு செல்வது ஸ்ரீலங்கா கடற் படையினரால் தடைசெய்யப் பட்டுள்ளதாம் எனக் கூறப் படுகின்றது. கடற்படையின ரால் விதிக்கப்பட்ட கட்டுப் பாடுகளை மீறியாரும் தெரிந்தோ தெரியாமலோ அவ்விடங்களுக்கு கொண்டு சென்றால் அவர்கள் கடுமை யாக தண்டிக்கப் படுவதாக வும் தெரிவிக்கப்படுகின்றது. (19)

### ஓய்வுபெற விண்ணப்பித்த ஆசிரியர்

## இம்மாதம் 31 ஆம் திகதிக்குப்பின் கடமைக்கு வரத்தேவையில்லை

அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் சலுகை அறிவிப் பினைத் தொடர்ந்து ஓய்வு பெற விண்ணப்பித்துள்ள கல்விப்பகுதியைச் சேர்ந்த

— 4 ஆம் பக்கம் பார்க்க

போற்றி அருளுக - 6

## சிவன் என்றே வாய் திறப்பாய்



மானினேர்விழி பற்றி மற்றைய மங்கையர்கள் தொடர்ந்து விமரிசனம் செய்கிறார்கள்.

''மானினேர்விழி விசித்திரமான பெட்டை''

''நேற்றுச் சொன்னவள், 'நாளைக்கு நானே எல்லாருக்கும் முந்தி எழும்பி உங்கள் எல்லாரையும் எழுப்ப வருகிறேன்,' என்று என்ன பிரமாதமாக வீம்பு பேசினாள்!''

''வீம்போ? பந்தயம் போட்டவள் எடியப்பா, என்னோடு''

''பாவம், அவளுக்கும் நம்முடைய பலவீனம் தான்''

''நித்திரையின் கொடுமை!''

கதையோடு கதையாக அவர்கள் மானினேர்விழி வீட்டுக்கு வந்துவிட்டார்கள். கதவிலே தட்டி அழைக்கிறார்கள்.

''மானினேர்விழி, மானினேர்விழி! என்ன? இன்னம் விடிய வில்லையா?''

''வானே, நிலனே பிறவே அறிவரியான் தானே வந்து எம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்—வான்வார் கழல்பாடி வந்திருக்கிறோமடி.''

''வந்து திற மானினேர்விழி, கதவை''.

''இதோ!''

மானினேர்விழியும் சேர்ந்து கொள்கிறாள், அந்தத் திருவெம்பாவைகளுடன். எல்லாரும் கூடி, அன்னத்தைத் துயில் எழுப்புகிறார்கள்.

''அன்னே இவையும்
சிலவோ?
பல அமரர்
உன்னற்கு அரியான்.
ஒருவன், இருஞ்சீரான்.
சின்னங்கள் கேட்கச்
சிவன் என்றே வாய் திறப்பாய்.
தென்னா, என்னா முன்னம்
தீ சேர் மெழுகு ஒப்பாய்.
என்னானை, என் அரையன்,
இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள், வெவ்வேறாய்.
இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர் போல்
வாளா கிடத்தியால்.
என்னே துயிலின்
பரிசு?
ஏலோர் எம்பாவாய்''.

### இசை கேட்டும் அசையாயோ?

சேவல் கூவுகிறது. குருவிகள் கீச்சிடுகின்றன. யாரோ ஒரு நாயனக் கலைஞர் பூபாளத்தை மெல்லென ஆலாபனை செய்கிறார், சங்குகள் ஒலிக்கின்றன. கிழக்கு வெளிக்கிறது. மங்கையின் வீட்டுக்கு வந்துவிட்டனர், திருவெம்பாவைகள்.

''மங்கை, மங்கை!
''.........''
''என்ன, பேச்சு மூச்சே இல்லையே!''
''கேழில் பரஞ்சோதி
கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள்
பாடினோம்.

# கணித, விஞ்ஞான, மனையியல் ஆசிரியர்கட்கு 1988-ம் ஆண்டு ஜன. முதல் அதிகரித்த சம்பளம்

சகல விஞ்ஞான, கணித, மனையியல் ஆசிரியர்களுக்கும் கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா பட்டதாரிகளுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபங்கள் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1990 - 41-ம் இலக்கத்தைக் கொண்ட இச்சுற்று நிருபத்தின்படி இவர்களுக்கான சம்பளம் 1988 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 25800 — 6X600 — 9 X 900 — 37500 என்ற சம்பள அளவுத்திட்டத்திற்கமைய மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதன் படி இவர்களுக்கு மாதாந்தம் 200 ரூபாவுக்கு மேல் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சகல விஞ்ஞான, கணித, மனையியல் மற்றும் கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இச்சம்பள அளவு உரித்தாகும்.

1969-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனிஷ்ட பல்கலைக்கழகங்களினால் வழங்கப்பட்ட இரு ஆண்டுகளுக்கான டிப்ளோமா - கனிஷ்ட பல்கலைக்கழக டிப்ளோமாவாகக் கருதப்படும் எனவும் இச்சுற்று நிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-17)

இலங்கை இனப்பிரச்சினை:

## "இந்திரா இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்?"

— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

எம். எஸ். உதயமூர்த்தி தஞ்சாவூர்த் தமிழர். மருத்துவ இரசாயனத்தில் கலாநிதிப் பட்டமும் 'புல் பிரைற்' அறிஞர் விருதும் பெற்றவர். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பல்லாண்டுகள் பணி புரிந்துவிட்டு இந்தியா திரும்பியிருக்கிறார்.

எளிய தமிழில் உளவியற் கட்டுரைகள் எழுதிப் புகழ்பெற்ற உதயமூர்த்தி ஒரு நல்ல எழுத்தாளருங் கூட.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி அவருடைய மதிப்பீடு இது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை முடிவில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டுக் குடிமக்கள். பத்து ஆண்டுகளுக்கும் மேலாகச் சித்திரவதைப்பட்டதன் விளைவாக வேறுவழியில்லை என்ற நிலையில் அவர்கள் தள்ளப்பட்டனர் என்பதை இந்திய அரசும் அதிகாரிகளும் மறந்து விட்டுச் செயல்பட்டது ஒரு புறமிருக்க...

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தங்களது செல்வாக்குக்குப் பயன்படுத்த முன்வந்த அளவுக்கு—சுயலாபமும் சுய விளம்பரமும் தேடிக்கொண்ட அளவுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் உண்மையான அக்கறை காட்டவில்லை என்பதும் உண்மை.

தமிழினத் தலைவர் என்று அடைமொழியைச் சேர்த்துக் கொள்ளும் நம் முதல்வர் 'தேசிய முன்னணி அரசு எங்கள் அரசு. அது தமிழ் மாநிலத்துக்காகச் செயல்படும் அரசு' என்று பேசி வந்த முதல்வர், எந்த விதத்தில் தேசிய முன்னணி அரசை இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் பயன் படுத்தினார் என்று பார்த்தால், பெரிய பூஜ்யம் தான் மிஞ்சுகிறது!

அதாவது, இவர்கள்—தமிழ் இன மானக் காவலர்கள்—தங்கள் தோலைக் காப்பாற்றிக் கொள்வதில் தான் அக்கறை காட்டினார்கள். தெளிவாக முன்வந்து தமிழ் மக்களுக்கும் தேசிய முன்னணி அரசுக்கும் ஓர் உண்மையான—துணிவான முடிவை எடுத்துக்கூறத் தவறி விட்டார்கள்!

இவர்கள்தான் எதிர்க்கட்சியாக இருந்த போது. தங்கள் சட்டசபை உறுப்பினர் பதவியையெல்லாம் துச்சமாகக் கருதி அதை ராஜினாமா செய்தவர்கள். இன்று இதை நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறது 'இவர்களா அவர்கள்'? என்று கேட்கும் நிலையில் நாம். இவர்களுக்கு வேண்டிய தேசிய முன்னணி அரசு போனபின், இலங்கைத் தமிழர்களுக்காக இவர்கள் என்ன நன்மை செய்துவிட முடியும்? வாய்ப்பு இருந்த போது அதைப் பயன்படுத்தாதவர்களை என்னவென்று சொல்வது?

ஆக மொத்தம் மிஞ்சி நிற்பது இலங்கைத் தமிழர்கள் படும் கொடுமை; அழிக்கப்படுகிறது தமிழனம் என்ற உண்மை.

சந்திரசேகரின் இன்றைய புதிய ஆட்சி என்ன செய்யப் போகிறது? இதுதான் இன்றைய கேள்வி. சந்திரசேகருக்குப் பின்னால் இருக்கும் சூத்திரதாரியான ராஜீவ் காந்தி சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைய நிலையில் இந்திரா காந்தி இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்?' என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழினப் பிரச்சினை இன்று தீர்க்கப்படவில்லை என்றால், இந்தியாவுக்கு நிரந்தரமான பிரச்சினையாக அது ஆகிவிடும் அபாயம் இருக்கிறது. தீர்க்கதரிசனத்துடன் அணுகப்பட வேண்டிய விஷயம் இது.

விஷயங்களை ஒத்திபோடுவதோ, அக்கறைப்படாமல் அலட்சியம் காட்டுவதோ நல்லதல்ல, தர்மமுமல்ல ..

நன்றி: விகடன்

### "ஒரு திட்டம் மூடப்படுகிறது" நூல்வெளியீட்டு விழா

சங்கானை உதவி அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் எழுதிய 'ஒரு திட்டம் மூடப்படுகிறது' குறுநாவல் வெளியீட்டு விழா சுழிபுரம் பிரதேசசபை பணிமனை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் என் தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### பக்தர்களின் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணத்தில் உள்ள நாச்சிமார் கோயிலடியில் சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமைகளில் அம்மாள் தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் 15 சையிக்கிள்கள் இதுவரை இங்கு களவுபோயுள்ளன. (74)


சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12171

விற்பனைக்கு

மீண்டும் பழைய இடத்தில் எமது நிறுவனம் இயங்குகின்றது புதுவருட, நத்தார் பண்டிகைகளையொட்டி விசேட மலிவு விற்பனையும

''..........''

''என்ன, பேச்சு மூச்சே இல்லையே!''

''கேழில் பரஞ்சோதி
கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள்
பாடினோம்.
கேட்டிலையோ?''

''ஒப்பில்லாத பரஞ்சோதியின் ஒப்பில்லாத பெருங் கருணையை, இந்த உன்னதங்களையெல்லாம், நாங்கள் பாடுகிறோம்! இந்த இசை கூடவா உன்னை உசுப்ப வில்லை?''

''இது என்ன பேய்த் தூக்கமோ? ஏன் பேசாமற் கிடக்கிறாய்? வாயைத் திற. பதிலைச் சொல்லு''.

''ஆழியான் மீதில் அன்பு செலுத்தும் அழகு இது தானோ?''

''ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை—அம்மையும் அப்பனுமாய் அமைந்த ஒப்பிலா மணியை—பாட வேண்டாமா? வா, மங்கை''

''இதோ!''

மங்கையும் வந்துவிட்டாள். எல்லாரும் குழுமிவிட்டனர்.

''அடி சக்கை! எல்லாரும் வந்தாயிற்றா?''

''இனிப் போக வேண்டியதுதான்—பொய்கைக்கு''

''போக வேண்டியது என்று நீ இட்டி முழக்குகிறாயே—பொய்கை ஏதோ ஐம்பது காத தூரத்திலே உள்ளது போலத் தோன்றும்படியாக! அதோ தெரிகிறது''.

''அதோ தெரிகிறது. ஆலடியைக் கடந்து விட்டோம்''.

அவர்கள் எல்லாரும் பொய்கைக் கரைக்கு வந்துவிட்டார்கள். அதில் நிரம்பி நின்றது—தாமரை பூத்த தண்ணீர்.

- 'சித்தமழகியான்'

தமிழினப் பிரச்சினை இன்று தீர்க்கப்படவில்லை என்றால், இந்தியாவுக்கு நிரந்தரமான பிரச்சினையாக அது ஆகிவிடும் அபாயம் இருக்கிறது. தீர்க்கதரிசனத்துடன் அணுகப்பட வேண்டிய விஷயம் இது.

விஷயங்களை ஒத்திபோடுவதோ, அக்கறைப்படாமல் அலட்சியம் காட்டுவதோ நல்லதல்ல, தர்மமுமல்ல..

நன்றி: விகடன்

# செய்முறைப் பரீட்சை இல்லை; மாணவர் பெரும் பாதிப்பு

க.பொ.த (சா.த)1989-ம் வருடம் யாழ் மாவட்டத்தில் நடத்தப்படாத செய்முறைப் பரீட்சையை உடனடியாக நடத்த வேண்டுமென வடமாகாண ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேற்படி வருடம் நடைபெற்ற சங்கீதம், நடனக்கலை பாடத்தில் தோற்றிய மாணவர்க்கு செய்முறைப் பரீட்சை நடைபெறாததால் பரீட்சை எடுக்க முடியாது போய்விட்டது.

க.பொ த (உ.த) பரீட்சைக்குத் தோற்ற இப்பாடத்தில் சித்தியெய்துதல் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (74)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

மீண்டும் பழைய இடத்தில எமது நிறுவனம் இயங்குகின்றது புது வருட, நத்தார் பண்டிகைகளையொட்டி விசேட மலிவு விற்பனையும நடைபெறுகிறது.
லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர், 249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 12178

HAND PUMPS
☐ வீட்டுத்தேவைக்கோ, ☐ விவசாயத்தேவைக்கோ
HAND PUMPS
எம்மால் பொருத்தப்படும்
ROCK ENGINEERS
KOPAY. 12184

பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிலையம்
தெல்லிப்பழை

ஆனி மாதத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்து சீரற்ற நிலைமையினால் இடைநிறுத்திவைக்கப்பட்ட மாணவ குடும்பநல சேவையாளர் பயிற்சி மீண்டும் 01-01-1991 தொடக்கம் இணுவிலில் ஆரம்பிக்கப் படுகின்றது. சகல மாணவிகளும் 01-01-91இல் தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தவறாது சமுகம் அளிக்கவும்.

சுகாதார வைத்திய அதிகாரி
தெல்லிப்பழை.
12176

தேவை

சங்க பேக்கரியில் பாண் பிஸ்கட் உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாளர் தேவை. அனுபவமுள்ளோர் 02-01-1991-ம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.
12169

### எலி, பறவைகள் மேல் பழியைப் போட்டு

# திடீர் கோடீஸ்வரர்களாக மாறிய

# 130பேரைத் தேடி பொலிஸ் வலை வீச்சு!

கொழும்பில் திடீரென கோடீஸ்வரர்களாக மாறிய 130பேரைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

அரச உணவுக்களஞ்சியங்களில் கடமைபுரியும் 130 பேரே இவ்வாறு திடீர் கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனராம்.

2800 ரூபா மாதச் சம்பளம் பெற்ற ஒரு களஞ்சியப்பொறுப்பாளரிடம் 12 உல்லாச வாகனங்கள் இருக்கின்றன. இவரிடம் 150 ஏக்கர் வளமான காணியும், 250 லட்ச ரூபா பணமும், நவீன இரு மாடிவீடுகளும் உள்ளன. பொலிஸார் நடாத்திய விசாரணைகள் மூலம் இத்தகவல்கள் பெறப்பட்டுள்ளன

இருபது வருடங்களாக அரச உணவுக்களஞ்சியங்களில் இருந்து காணாமல் போன பொருட்களுக்கு பறவைகளும் எலிகளுமே காரணம் என போலிககாரணம் காட்டியே இந்த 130 களஞ்சிய ஊழியர்களும் கோடீஸ்வரர்களாகியுள்ளனராம்.

இந்தபெரும் மோசடியில் பிரபல அரசியல்வாதிகள், உணவுத்திணைக்கள முன்னாள் உயர் அதிகாரிகள், வர்த்தகர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், காவலாளிகள், புள்ளிவிபர ஊழியர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

சுமார் 400 கோடி ரூபா பெறுமதியான அரிசி, மா, போன்ற உணவுப் பொருட்களை அரச உணவுக்களஞ்சியங்களில் இருந்து இவர்கள் மோசடி செய்துள்ளனராம்

மேற்படி 400 கோடி ரூபா மோசடி பற்றிய செய்தியை ஏற்கனவே முரசொலி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே

## வடக்கில் இப்போது வழிபாட்டுத்தடையுமா?

வடபகுதியில் பொருளாதாரத்தடையுடன் வழிபாட்டுத்தடையையும் அரசு விதித்துள்ளதா என்ற சந்தேகம் சைவ அபிமானிகள் மத்தியில் எழுந்துள்ளது

இந்து ஆலயங்களில் நித்திய பூஜைக்கு தேவையான கற்பூரத்தை வடக்கிற்கு எடுத்துச்செல்வதற்கும் இப்போது வவுனியாவில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆலயங்களில் கற்பூர தீபாராதனையினை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகி வருகின்றது. இதுஒரு வகையில் மதவழிபாட்டு உரிமையை மறுக்கும் செயலாகவே கருதப்பட வேண்டியுள்ளதென வும் சைவ அபிமானிகள் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது நடைபெற்றுவரும் திருவெம்பாவை உற்சவநாட்களில் கிரியைகளுக்கு பெருமளவான கற்பூரம் தேவையென்பதுவும், தற்பொழுது ஒரு கிலோ கற்பூரத்தின் விலை ஆயிரம்ரூபாவை தாண்டிவிட்டது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (30)

## திருவெம்பா பூசை செய்ய கடற்படை கட்டுப்பாடு!

நயினாதீவில் திருவெம்பா பூஜை செய்வது தொடர்பாக கடற்படையினர் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

திருவெம்பாவைக் காலங்களில தினமும் காலை 5மணிக்குப் பின்னர் தான் ஆலயங்களில் பூஜை வழிபாடுகள் செய்யப்படல் வேண்டும் எனவும்.

கிராமங்களில் அதிகாலையில் கோஷ்டியாக திருவெம்பா பஜனை ஊர்வலங்கள் மேற்கொள்ளப்படுவது அனுமதிக்கப்படமாட்டாது எனவும் கடற்படையினர் நயினாதீவில் நியந்தனையுடன் கூடிய கட்டுபாடு விதித்துள்ளனராம்.

மீறினால் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்படை சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் எனவும் கடற்படை அதிகாரிகள்எச்சரித்துள்ளனராம்.(19)

## கரையோர காவற் படையால் அகதிகளின் படகுகள் பறிமுதல்

தமிழ் நாட்டித்து அகதிகளை ஏற்றிச் சென்ற பல தமிழர்களின் படகுகள் இயந்திரங்கள் தமிழ்நாட்டுக் கரையோரக் காவற் பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல இலட்சம் ரூபா பெறுமதியான படகுகள், இயந்திரங்கள் பறிக்கப்பட்டதால் படகுச்சொந்தக்காரர்கள் பரிதாப நிலைக்கு உள்ளாகி இலங்கைக்குத் திரும்ப முடியாமல் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (43

## யாழ் வைத்தியசாலையில் ஒட்சிசனுக்கும் தட்டுப்பாடு!

யாழ் போதனா வைத்திய சாலையில் என்றுமில்லாத வகையில் ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் சத்திர சிகிச்சைகள் பல பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆஸ்மா நோயாளர்களுக்கோ குறைமாதக் குழந்தைகளுக்கோ செயற்கை சுவாசம் வழங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) புஸ்பா சண்முகம் தெரிவித்தார்.

100 வெற்றுச் சிலிண்டர்கள் இங்கிருந்து ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன ஆனால் அவை நிரப்பப்பட்டு இது வரை இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் தாமதம் காட்டப்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## சிங்களப்பகுதிகளுக்கு அனுராதபுரத்திலிருந்து மருந்து!

## வவுனியா தமிழ்ப்பகுதி வைத்தியசாலைகளுக்கு மருந்து வழங்க கொழும்பில் அனுமதி மறுப்பு!

வவுனியா சுகாதாரத் திணைக்கள மருந்துக் களஞ்சியத்துக்கு அத்தியாவசிய மருந்துகளை அனுப்பிவைக்க கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்துளளதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் வவுனியா மாவட்டத்தில் உள்ள சிங்களப் பகுதிகளுக்கு மருந்து வகைகள் அனுராதபுரம் சுகாதாரத்தில் இருந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன

வவுனியா மருந்துக்களஞ்சியத்தில் இருந்தே மன்னார். முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதால் இங்குள்ள ஆஸ்பத்திரிகளில் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (70)

## தமிழக அரசின் சிறந்த கலைஞர் தெரிவு

## ஒவ்வொரு தமிழனும் ஒரு புலி

உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களின்படி அறுநூறுக்கும் மேற்பட்ட முகாம்களில் ஒரு லட்சம் அகதிகள் உள்ளனர். வடக்கு யுத்தத்தினால், தாம் விரும்பாமலே பாதிக்கப்பட்டவர்கள் அகதி முகாம்களுக்குள் திணிக்கப்பட்டனர்.

திருமலை இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜயரத்தினாவின் கூற்றுப்படி அம்மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை. முக்கியத்துவம் குறைந்த பகுதிகளே இன்னமும் விடுவிக்கப்பட வேண்டும் என்கிறார் அவர்.

ஆனால் நகரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர பிரிகேடியர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் மத்தியில் இன்னமும் முன்னைய எரிச்சூட்டும் சம்பவங்கள் தொடர்கின்றன. நியாயமற்ற முறையில் கைது செய்யப்படுவதுபற்றி மக்கள் இன்னமும் இரகசியமாகப் பேசிக்கொள்கிறார்கள்.

23 வயது எமிலியாஸ் என்ற பெண்ணின் இரண்டுமாத ஆண்குழந்தைக்குத் தனது தந்தையின் முகம் தெரியாது ஒரு தொழிலாளியான இந்தப் பெண்ணின் கணவன் ஒரு அகதி முகாமில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டவர். அவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்று அவரது மனைவிக்குக் கூறப்பட்ட போதிலும் அவர் திரும்பவே இல்லை.

திருமலை நகர பிரஜைகள் குழுவின் ஆவணச் சான்றுகளின்படி மொத்தம் இருநூற்றி எழுபத்தெட்டுப்பேர் திருமலையில் யூன் பதினைந்தில் இருந்து காணாமல் போயுள்ளனர். இவர்கள் பதினைந்து வயதில் இருந்து அறுபத்தைந்து வயது வரையானவர்கள். சிலர் பாதுகாப்புப் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. ஏனையோர் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களில் நகரத்தை வலம்வரும் சிலரால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். இவர்கள் முஸ்லிம ஊர்காவற்படையினர் என்று குடிமக்கள் குற்றம் சாட்டினர்.

மீளக்குடியமர்த்தும் முறைகள் பற்றியும் சந்தேகம் தெரிவிக்கபபடுகிறது தமிழர் பிரதேசங்கள் என்று முன்னர் குறிப்பிடப்பட்ட பகுதிகளிலுள்ள கோவில் நிலங்களில சிங்களவர்கள் குடியமர்த்தப் படுகின்றார்கள் என்று திருமலையின் மூத்த குடிமகன் ஒருவர் முறையிட்டார்.

உப்புவெளி என்ற தமிழ்க் கிராமத்துக்கு அருகில் உடல் தளர்ந்த ஓர் முதியவரைச் சந்தித்தோம் அவருடைய குடும்பத்தைப்பற்றி விசாரிக்கிறேம். அவர் முகத்தில் கண்ணீர் அருவியாக ஓடுகிறது பேச்சு மூச்சு இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதன் சனத்தொகையில் அரைப்பங்கினர் இடம்பெயர்ந்துள்ளனர். 90 வீதமானோர் இலவச உணவுப்பொருளில் தங்கி வாழ்கின்றனர். இந்த விபரங்களைச் சொன்ன ஓர் அதிகாரி தன்னை இனங்காட்ட மறுத்துவிட்டார். அரச ஊழியராயினும் சரி, அல்லது ஓர் குடிமகனாயினும் சரி எவரும் தாம் இனங்காட்டப்படுவதை விரும்பவில்லை.

அதேவேளையில் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் தமிழ்க் கிராமங்கள் அழிக்கபபடுவது பற்றி மட்டக்களப்பு அகதிமுகாம்களில் உள்ள தமிழர்கள் மிகுந்த வேதனை அடைகின்றனர்.

தமிழர்களைத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும்படி முஸ்லிம்கள் விடுத்த அழைப்பும் சந்தேகத்துடனேயே நோக்கப்படுகிறது.

மட்டக்களப்பு - வாளைச்சேனை வீதியிலுள்ள கிராமங்களில் எல்லாம் பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்தவர்கள். இக்கிராமங்கள் தற்போது கைவிடப்பட்டுள்ளன ஒரு காலத்தில் செழிப்புற்றுக் காணப்பட்ட இக்கிராமங்களில் எஞ்சியவை வெறும் சுவர்களும் வளைந்த கம்பிகளும் தான்.

யூன் மாதத்திலிருந்து இங்கு காணாமற்போனவர்களின் எண்ணிக்கை 1115 பேர்வரை என்று தெரிகிறது கிழக்குப் பல்கலைக்கழக எல்லைக்குள் அமைந்த வந்தாறுமூலை முகாமில் இருந்து 144 பேர் கூட்டிச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று முதலில் வெளியான உத்தியோகபூர்வ அறிக்கை ஊர்ஜிதம் செய்தது. பின்னர் இத்தொகை 32 ஆகக் குறைந்துவிட்டது. இப்படிக் காணாமல் போனவர்கள் பற்றி மக்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

32 பேர்மட்டுமே பிடிக்கப்பட்டதாகவும், பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் அரசாங்கம் இப்

டுபாடு விதித்துள்ளனராம்.

மீறினால் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்படை சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிவரும்.

ஆனால் வவுனியா மாவட்டத்தில் உள்ள சிங்களப் பகுதிகளுக்கு மருந்து வகைகள் அனுராதபுரம் சுகாதாரத் திணைக்கள மருந்துக்களஞ்சி

## காரைநகர் வர்த்தகர் கழுத்து நெரித்துக் கொலை!

எடடியாந்தோட்டைக்கு அண்மையிலுள்ள புளத்கோபிட்டிய என்னுமிடத்தில் வியாபாரம் செய்துவந்த தமிழ் வர்த்தகரொருவர் சிங்கள காடையர்களினால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இருந்த வியாபாரப்போட்டி, அண்மையில் இவர்களுக்கிடையே தோன்றிய இனத்தகராறு என்பன காரணமாகவே இவர் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தையல்முத்து ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் காரைநகர் வேம்படி வாசியுமான விநாசித்தம்பி கந்தையா (57) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார். ப-31

## போலி நகைகள் அடகுவைப்பு!
### வங்கி ஊழியர்கள் தேடப்படுகிறார்கள்

கொழும்பிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் நகை அடகு பிடிக்கும் நிலையங்களில் போலித் தங்கநகைகளை அடகு வைத்துப் பணம் பெற்ற மோசடி ஒன்று கொழும்பு மோசடிப் புலனாய்வுப் பணியகப் பிரிவினரால் அம்பலமாக்கப்பட்டுள்ளது.

தகவல்களையடுத்து பொலிசார் சிவிலுடையில்கோட்டை வை. எம். பி. ஏ. கிளைக்கு சென்ற வேளையில் நகை அடகு பிடிக்க வந்த ஒருவர் போலித் தங்க நகைகளுடன் கைது செய்யப்பட்டார்.

பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் வங்கி ஊழியர்கள் சிலரும் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38,

## தமிழக அரசின் சிறந்த கலைஞர் தெரிவு

1989ஆம் ஆண்டுக்கான தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன நீதிபதி பி. பாஸ்கரன் தலைமையில் 11 உறுப்பினர்களைக் கொண்டகுழு தேர்ந்தெடுத்துள்ள விபரம் வருமாறு:-

சிறந்த படம்: முதற்பரிசு:- புதிய பாதை, இரண்டாம் பரிசு:- புதுப்புது அர்த்தங்கள், மூன்றாம் பரிசு:- நியாயத்தராசு, சிறப்புப் பரிசு:- கரகாட்டக்காரன், சிறந்த இயக்குநர்:- கே பாலச்சந்தர் (புதுப்புது அர்த்தங்கள்) சிறந்த நடிகர்:- கமலஹாசன் (அபூர்வசகோதரர்கள்) சிறந்த நடிகை:- ராதிகா (நினைவுச் சின்னம்), சிறந்த கதாசிரியர்:- ஆர். பார்த்திபன் (புதியபாதை), சிறந்த வசன கர்த்தா:- கலைமணி (என் புருஷன் தான் எனக்கு மட்டும்தான்), சிறந்த இசையமைப்பாளர்:- இளையராஜா (வருஷம் 16, கரகாட்டக்காரன்), சிறந்த பாடலாசிரியர்:- வாலி (வருஷம் 16, அபூர்வ சகோதரர்கள்), சிறந்த பின்னணிப் பாடகர்: ஜேசுதாஸ் (நியாயத்தராசு என்ற படத்தில் ''வானம்'' என்ற பாடல்) சிறந்த பின்னணிப் பாடகி: பி. சுசிலா (வரம் படத்தில் மகனே, மகனே கண்ணுறங்கு என்ற பாடலுக்காக)

கலைத்துறை வித்தகர்களுக்கான விருது பெற்றோர்-

அறிஞர் அண்ணா விருது:- மணிவண்ணன், கே. எஸ். கோபாலகிருஷ்ணன், கலைவாணர் விருது: கே. ஏ தங்கவேலு, எஸ். எஸ். சந்திரன்.

பாவேந்தர் பாரதிதாசன் விருது:- சுரதா வைரமுத்து. எம் ஜி. ஆர். விருது:- ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி.

32 ஆகக் குறைந்துவிட்டது. இப்படிக் காணாமல் போனவர்கள் பற்றி மக்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

32 பேர்மட்டுமே பிடிக்கப்பட்டதாகவும், பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் அரசாங்கம் இப்போது கூறுகிறது. ஆனால் இவர்களில் எவரும் திரும்பி வரவில்லை என்று, இவர்கள் கைது செய்யப்பட்டபோது இவர்களுடன் இருந்த ஒருவர் கூறினார். இவரின் கணக்குப்படி 158 பேர் கூட்டிச்செல்லப்பட்டனர்.

காத்தான்குடியில் இருந்து மட்டக்களப்புக்கு வரும் முஸ்லிம் வர்த்தகர்கள் ஓரிரு மணித்தியாலங்களுக்கு மேல் தங்குவதில்லை. கடைகள் விரைவாக மூடப்படுகின்றன. மக்கள் அமுல் செய்யும் 'ஊரடங்கு' மட்டக்களப்பு நகரை ஆட்கொள்கின்றது.

இராணுவத்தில் இருந்து இளைப்பாறிய கேணல் இரத்னாயக்க தற்போது வவுனியா மாவட்டத்தின் சிவில் அதிகாரியாகப் பணிபுரிகிறார். காணமற் போனவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டவர்கள் போன்றோரின் சார்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் இவர் மேசையில் மலைபோல் குவிகின்றன. சிங்களத்தைப் போன்றே தமிழிலும் சரளமாகப் பேசக்கூடியவர். காணாமற் போனவர்களின் குடும்பத்தினரும் படையினரால் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினரும் கூறுவதை பொறுமையாகச் செவிமடுக்கிறார்.

அது ஒரேமாதிரியான சோகக்கதை. 'எனது கணவன் இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்டார். அவர் எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது' இது கைக்குழந்தையை ஏந்திய ஓர் இளம்பெண்ணின் புலம்பல்.

ஏனைய இடங்களில் அதிகாரிகளிடமும் இராணுவத்திடமும் வேண்டிக்கொண்டது போலவே கேணல் ரத்னாயக்காவிடமும் நாம் வேண்டிக்கொண்டோம். யாரையேனும் தடுத்து வைக்கவேண்டிருப்பின் அப்படியே செய்யுங்கள். குடும்பத்தினர் அவர்களைப்பார்க்காவிட்டாலும் பரவாயில்லை ஆனால் கைது செய்யப்படுபவர்கள் ஏன், எங்கே தடுத்து வைக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் குடும்பத்தினர் அறிய வேண்டும். அரச இயந்திரத்தில் நம்பிக்கையைக் கட்டி எழுப்பு

—04 ஆம் பக்கம் பார்க்க

MURASOLI REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA 28 12- 1990 வெள்ளிக்கிழமை

கிறிஸ்து பிறப்பு– சிந்தனை – 6

## இறைமகனை ஈன்றோர்

கிறிஸ்து சூசையின் மகன் அல்லவா!

இவரது தாய் மரியாள் என்பவர் அல்லரோ! இப்படியும் கிறிஸ்து வளர்ந்த ஊராகிய நாசரேத்து கிராமவாசிகள் இயேசுவை இனம் கண்டு கொள்ளுகின்றனர்.

''எழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடைமக்கட் பெறின்'' என்னும் வள்ளுவப் பெருமானின் சிந்தனை நற்பண்புடைய மக்களைப் பெறுவதால் பெற்றவர் ஆசீர் பெறுகின்றனர் என்கிறது. இறைவனையே பெற்றெடுத்த தாய் மரியாள், அவரது கணவன் சூசை போற்றுதற்குரியவர். ஈன்றவர்கள் எல்லோரும் வாழ்த்துப் பெறுவது இல்லை. காரணம் அவர்களின் பிள்ளைகளின் வாழ்வில் தாழ்வுண்டு.

இயேசுவின் வாழ்வும் அவரது சாதனைகளும் மக்களை வியப்பில் ஆழ்த்தின அவ்வதிசய பிறவியை ஈன்றோர் எத்துணை உயர்ந்தோர் என்பதை மக்கள் கண்கள் நம்பவில்லை. இயேசுவின் பிறப்பு, அவரது பிறந்த வேளையிலும் பார்க்க அவரது மரணத்தின் பின்புதான் பலமடங்கு அர்த்தங்கள் கொண்டது காரணம், அவரது வாழ்வும், வாழ்வின் இலட்சியங்களும், வாழ்வில் கொண்ட உயர் பண்புகளும் அவரது பிறப்பை மெருகூட்டின.

இப்படிப்பட்ட இறைமனிதனின் தோன்றலின் விளை நிலங்கள்தான் மரியாளும் சூசையுமாகும். நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்பது ஒரு கவிஞன் குரல். மரியாளின் உள்ளத்தில் வளர்ந்த இறை உணர்வும், பிறர்பாசமும் தூய்மையும் தியாகமும் இறைமகனுக்குப் பாவோடு அமுதாக ஊட்டப்பட்டன. நீதிமானாய்த் திகழ்ந்த சூசையின் பொறுப்பும் நன்மதிப்பும் விவேகமும் பாலகன் இயேசு வளர்வதற்கு உரமாய் அமைந்தன.

''அறிவிலும் ஞானத்திலும் வளர்ந்து இறைவனுக்கும் மக்களுக்கும் உகந்தவரானார்'' என்று பெற்றோர் வளர்ப்பை உறுதிப்படுத்துகின்றது வேதாகமம். இயேசுவின் பெற்றோர் வாழ்ந்த அரசியல், பொருளாதார சமூக சூழலில் ஒரு சுமுகமான ஓட்டம் இருந்தது என்பதற்கில்லை. அவர்கள் அகதிகளானதும், உயிரைக் காக்க ஓட்டம் பிடித்ததும் வாழ்வின் புதிர்களைப் புரியாமல் தவித்ததும் வாழ்க்கைப் பயணத்தில் தவிர்க்க முடியாத உண்மைகள். ஆயினும் அப்பெற்றோர் பெருமைக்குரியவர். ஏனென்றால் துன்பங்களைச் சவால்களாகத் தாங்கிக் கடமைகளைச் செய்து முடித்தவர்.

இன்று, எம் குழந்தைகளின் விளை நிலம் நாங்கள். அன்பு இன்றி வரண்ட விளைநிலங்களில் பண்புள்ள பிள்ளைப் பயிர்கள் தளிர்ப்பதெப்படி? பெற்றோர் விரக்தியில் நடைப்பிணங்களானால் பிள்ளைகள் தன் நம்பிக்கையில் வளருவதெப்படி? இயேசு, மரி, சூசை அமைத்த திருக்குடும்பம் நம் எல்லோருக்கும் ஒரு கலைக்கூடம்.

— சுவாமி ஜீவா போல்

# யாழ்மாவட்ட பாடசாலைகளை அடுத்த ஆண்டில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளையும் அடுத்த ஆண்டு முதலாம்தவணையுடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதனால் தற்போது பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளை அவர்களுக்கு பொருத்தமான இடங்களுக்கு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள்செயலகத்தைச்சேர்ந்தவர்கள் சேர்ந்து அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

வன்செயல்கள் காரணமாக குடியிருப்புக்களை இழந்துள்ள உள்ளூர் அகதிகளை தமது சொந்த இடங்களுக்கு திரும்பக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தி அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.(66)

## சீனித்தட்டுப்பாட்டுக்கு வியாபாரிகள் காரணமாம்

சீனித்தட்டுப்பாட்டுக்கு உண்மையில் பற்றாக்குறை காரணமாக இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாறாக வவுனியா நிலைபரங்களைச் சாட்டாகவைத்து கொள்ளை இலாபம் பெறும் பொருட்டு சில வர்த்தகர்கள் பதுக்கிவைத்துள்ளதாக பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள் கண்டு பிடித்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளின் பதுக்கப்பட்ட சீனி மூடைகள் வெளியேவரும் எனவும் இவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (32)

## தேங்காய் எண்ணையில் கலப்படமாக விற்பனை

குடாநாட்டில் விற்பனையாகும் தேங்காய் எண்ணையில் தூர்நாற்றம் வீசுவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தேங்காய் எண்ணையைச்சமையலுக்குப் பாவித்த போது உணவுப்பொருள் ருசியின்றி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல நல்லெண்ணையிலும் சில இடங்களிலும் கலப்படம் செய்து விற்பனை செய்து வருவதாகவும் பல பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (33)

## தேங்காய் திருடவந்து சாரத்தையும் இழந்தார்!

களவாக இரவில் தேங்காய் பறித்த ஒருவர் தேங்காயையும் தனது சாரத்தையும் இழந்து ஓடிய சம்பவம் மூளாய் இயேட்டருக்கு அண்மையில் நடந்துள்ளது.

நள்ளிரவில் மரத்தில் ஏறிய ஒருவர் தனது சாரத்தைக் கழற்றி அதன் மூலைகளில் முடிச்சுப் போட்டு அதனுள் தான் பறித்த ஐந்து தேங்காய்களையும் வைத்து கட்டினார். அவற்றினைக் கொண்டிறங்கிய அவரது தேங்காய் முடிச்சு தவறி விழுந்தது.

சத்தம் கேட்டு விளக்குடன் வந்த வீட்டுரிமையாளரைக் கண்டதும் மரத்தில் இருந்து குதித்து தனது சாரத்தையும் பிடுங்கிய தேங்காய்களையும் விட்டு விட்டு வீட்டின் மதிலேறி ஓடித் தப்பித்துக் கொண்டார். (32)

## சிறுமி மர்ம மரணம்

படுக்கைக்குச் சென்ற கந்தசாமி ஜெறினா (12) என்ற சிறுமி காலையில் பிணமாகக் காணப்பட்ட சம்பவம் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றது.

இவரின் மரணம் மர்மமாக உள்ளதாக தெரியவருகிறது. (ப.3)

## அமைச்சரின் வெளிநாட்டு பயணம் ஜனாதிபதி தடுத்து நிறுத்தினார்

மாகாண சபை ஒன்றின் அமைச்சர் ஒருவர் தனது செயலாளருடன் வெளிநாடு செல்லமுயன்றதைஜனாதிபதி பிரேமதாஸ தடுத்துள்ளார்.

இந்த அமைச்சர் வெளிநாடு ஒன்றில் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள இங்குள்ள அந்த நாட்டின் தூதரகத்தின் மூலம் ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது ( 33)

## கட்டுவனில் குண்டு வீச்சு

கட்டுவன் பகுதியில் நேற்று மாலை 3 மணியளவில் இரு குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின.

இதனால் ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. ஹெலிகப்டரும் இப்பகுதியில் தாக்குதல் மேற்கொண்டது. (48)

பாராளுமன்றத்தில் நவம் எம்.பி:-

## விடுதலைப்புலிகளை அழித்து அமைதியை ஏற்படுத்த முடியாது

தென்பகுதியில் ஜே. வி.பி. யினரைப் பலவீனப்படுத்தி அமைதியை ஏற்படுத்தியது போல புலிகளை அழித்து வடக்கில் அமைதியை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு தமிழர் கூட்டணி எம். பி. கே. நவரத்தினம் பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; வெளிநாடுகளில் பெற்ற கடனை வடக்கு கிழக்கு யுத்தத்துக்கு பயன்படுத்தக் கூடாது.

காலம் சென்ற யாழ்ப்பாண எம். பி. ஜீ. ஜீ பொன்னம்பலம் அமைச்சராக இருந்த போது வடக்கே காங்கேசன்துறை சிமெந்து தொழிற்

ஏதாவதொரு அபிவிருத்தி திட்டங்கள் உருவாக்கப்பட்டனவா?

டாக்டர் விக்ரமசிங்க 40 வருடங்களுக்கு முன்னரே மகாவலி கங்கையை வடக்கே திருப்பவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் இருந்தும் இதுவரையும் எந்தவொரு கங்கையும் வடக்கே வரவில்லை

வடபகுதி விவசாயிகள் கிணறுகள் மூலமே நீர்ப்பாசனம் செய்து தமது உற்பத்தி பொருட்களை தெற்கே அனுப்புகிறார்கள் என்றார். (33)

## மூளைக் காய்ச்சலுக்கு ஐவர் பலி

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் மூளைக்காய்ச்சல் நோயினால் 5 பேர் வரை மரணமடைந்துள்ளனர். நேற்றுக் காலை 14 வயதுச் சிறுமியொருத்தி இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளார்.

இந்நோய் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைப் போல் யாழ் குடாநாட்டிலும் பரவி வருகிறதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (ப-11)

வயோதிபரை...

பரின் சொந்த இடமான ஆரையம்பதியைச் சேர்ந்த ரெலோ உறுப்பினர் அன்வர் என்பவனாலேயே வயோதிபர் படுகொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## இண்டிப்பெண்டன் நியூஸ் குறூப் மூடப்படும் நிலையில்?

தினபதி, சன், வீக்கெண்ட், சிந்தாமணி பத்திரிகைகளை வெளியிடும் இண்டிப்பெண்டன் செய்தி நிறுவனம் தனது ஆயிரம் ஊழியருக்கு வேலை நீக்கத்திற்கான கடிதங்களை சமர்ப்பித்துள்ளது.

நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடி காரணமாக இவ் ஊழியர்களுக்கு தொடர்ந்து ஊதியம் ... இருப்பதாக

ஒவ்வொரு தமிழனும் ஒரு புலி...

வதற்கு அதுவே முதற்படி போல் தோன்றுகிறது. பயமும், ... அன்னியப்படுத்தவே செய்

## சபையில் திருமதி புலேந்திரன்

## விமானப்படையினர் சரியாக

## ஒவ்வொரு தமிழனும் ஒரு புலி...

வதற்கு அதுவே முதற்படி போல் தோன்றுகிறது. பயமும், நம்பிக்கையின்மையும் மக்களை அன்னியப்படுத்தவே செய்கிறது.

''நாம் ஓர் யுத்தம் செய்கிறோம்'' இப்படிக் கூறுகிறார் வவுனியாவில் உள்ள ஓர் இளம் இராணுவ கேணல். 'அர்த்தமற்ற ஓர் யுத்தத்தில் நாம் ஒருவரை ஒருவர் கொல்கிறோம்' என்கிறார். அரசியல் இராணுவ தீர்வுகள் பற்றிய ஓர் கருத்துப்பரிமாறலில் பங்குபற்ற மறுக்கும் அவர், தமக்கே உரியமுறையில் சமூகங்களுக்குக்கிடையில் பாலம் அமைக்க முயன்று வந்துள்ளார்.

ஓர் முதிய சிங்களக் கிராமவாசியுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவருக்கு 75 வயது இருக்கும். இன்னும் சிலகாலம்தான் இருப்பார்கள் என்பதை ஏற்றுக் கொள்வீர்களா என்றேன். ஆம் என்றார். மறு பிறவியில் நம்பிக்கை உண்டா எனக் கேட்டதற்கும் ஆம் என்றார். அடுத்த பிறவியில் நீங்கள் ஓர் தமிழராய்ப்பிறந்தால்? ... அவர் என்னை ஏற இறங்கப் — பார்த்தார். என் கேள்வியை அவர் புரிந்து கொண்டார்.

தந்திரிமலையில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவத்தால் உயிர் தப்பியோர்களைச் சென்று பார்க்க நாம் தவறிவிட்டோம். சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சில மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் சனசமூக நிலைய மண்டபத்தில ஓர் இளைஞன் விசனத்துடன் காணப்படுகிறான். அவன் கோபம் எல்லாத் தமிழர்கள் மீதும் ருப்புகிறது. 'புலிகள் எல்லாம் தமிழர்களே! எனவே ஒவ்வொரு தமிழனும் ஒரு புலி.' அவனுக்கு வேறு எந்தக் காரணமும் தெரியவில்லை.

நன்றி: சண்டே ரைம்ஸ்

தமிழாக்கம்: 'நந்தன்'

குறிப்பு: இக்கட்டுரை 04. 11. 90 ஓதழில் வெளிவந்தது. பிரிகேடியர் விஜயரத்னா 18. 12. 90 இல் கண்ணிவெடிச்சம்பவத்தில் கொல்லப்பட்டுவிட்டார்.

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற் (லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 28-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

டுள்ள பல்வேறு நெருக்கடி காரணமாக இவ் ஊழியர்களுக்கு தொடர்ந்து ஊதியம் வழங்க முடியாது இருப்பதாக அக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது நிலை குறித்து தொழிற் திணைக்களத்திற்கு விளக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்டிப்பென்டன் நியூஸ் குறாப் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் வங்கி ஒன்றில் கடன்பட்டு மீளச் செலுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

### இம்மாதம்...

ஊழியர்கள் எவ்வித காரணத்தை முன்னிட்டும் இம் மாதம்31 ஆம் திகதிக்குப் பின்பு கடமைக்குச் சென்று வரவைப் பதிந்து கொள்ளக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ் பாடசாலைகளில் அதிக ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதினால் பாடசாலைகளில் ஆசிரியர்களின் தேவையினைச் சீராக்கும் நடவடிக்கையினையும், அதிகாரிகளின் வெற்றிடங்களைத் தகுதியானவர்களைக் கொண்டு நிரப்பும் நடவடிக்கையினையும் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (32)

எம். பி. ஜீ. ஜீ பொன்னம்பலம் அமைச்சராக இருந்த போது வடக்கே காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையையும் பரந்தன்இரசாயனத்தொழிற்சாலையையும், கிழக்கில் கடதாசி ஆலையையும் உருவாக்கினார் அதன் பின்னர் வடக்குகிழக்கு பகுதிகளில்

### கடமைக்குத்...

நிலவும் நிலைவரங்களைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் தொடர்ந்தும் தற்காலிகமாகக் கடமைபுரிய விருப்பம் தெரிவித்திருந்தும் கல்வி அமைச்சின் ஒரு சுற்றுநிருபத்தின்படி அவ்வாறு கடமைபுரிய அனுமதிக்க முடியாத நிலை யாழ் கல்வித் திணைக்களத்துக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

### ஆனையிறவில்...

டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் மாறன் (சவரிமுத்து அமலதாஸ், கிளிநொச்சி), செம்பவளம் (இன்பராசா) துணுக்காய் ஆகிய போராளிகள் வீரமாணமடைந்தனர்.

மோதலைத் தொடர்ந்து மாலை 4மணியளவில் மீண்டும் வந்த இரு பொம்மர்கள் ஆனையிறவுப் பகுதியில் குண்டு வீச்சு நடாத்தின. (35- 71)

### சபையில் திருமதி புலேந்திரன்

# விமானப்படையினர் சரியாக குண்டு போடுகின்றனராம்!

யாழ்ப்பாணப் பகுதியில் இடம்பெறும் விமானத்தாக்குதல்கள் குறித்து பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்களும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கண்டித்துப் பேசியது தெரிந்ததே.

ஆனால் வவுனியா மாவட்ட ஐ தே. க. எம். பியும், கல்வி ராஜாங்க அமைச்சருமான திருமதி புலேந்திரன் விமானப்படையினர் சரியாகவே குண்டு வீசுகிறார்கள் என்று பாராட்டிப் பேசியுள்ளார். (33)

### வடக்கு கிழக்கு...

பையாக சட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக சொல்லமுடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்ததாக பீ. பி ஸி. நேற்றிரவு குறிப்பிட்டது.

### ஆறு...

ளையிடப்பட்டுள்ளன.

இதேவேளை மாங்குளத்தில் ஓரிரு தேநீர்க் கடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெற்றோல் நிலையத்திலும், மின்சாரசபை அலுவலகத்திற்கு அருகிலும் ஓரிரு கடைகள் ஓலைக் கொட்டிலால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது (38)

### காரைநகரில் மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபை ஆதரவில் மணிவாசகர் விழா எதிர்வரும் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி இரு தினங்கள் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குச் சபைத் தலைவர் திரு. செ தேவதாசனும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும் தலைமைதாங்குவர்.

### வல்லையில்

மேற்கொள்ளப்பட்டது.

சாரதியின் சாதுரியத்தால் எவ்வித சேதமும் நிகழவில்லை. (ப 24)